# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

ஈரோடு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்தை புகார்தாரர் அணுகி, தான் வாரிசுதாரர் சான்றிதழ் கோரி மனு ஒன்றை ஈரோடு மாவட்டம், சிறுவாலூர் கிராமம், கிராம நிர்வாக அதிகாரி திரு.ஜி.கந்தசாமி என்பவரிம் கொடுத்ததாகவும், வாரிசுதாரர் சான்றிதழ் வாழ்குவதற்கு ரூ.5,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என வற்புறுத்துவதாகவும், அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 10.11.2020 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது சிறுவல்லூர் கிராமம், கிராம நிர்வாக அதிகாரி திரு.ஜி.கந்தசாமி, புகார்தாரரிடமிருந்து ரூ.5,000/- கையூட்டாக கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.



# PRESS NOTE

Today, 10.11.2020 the complainant approached Vigilance & Anti – Corruption, Erode detachment, and gave complaint that he went to VAO Office, Siruvalur Village for obtaining Legal Heir Certificate for which the Village Assistant Officer Tr.G.Kandasamy demanded Rs.5000/- as bribe for issuing Legal Heir Certificate. In this connection a case was registered today 10.11.2020 and a trap was organized. During trap proceedings, the accused Tr.G.Kandasamy, VAO, reiterated his earlier demand in the presence of the Official witness and received the bribe amount of Rs.5,000/- from the complainant. The accused was caught red handed and arrested.



## <u>பத்திரிக்கைச் செய்தி</u>

கடந்த 2012 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம், அடம்பர், விஷ்ணுபுரம், திருவாரூர் அலுவலத்தில் பணியாற்றி வந்த எதிரிகள் திரு.அன்பழகன், இளநிலை பொறியாளர், திரு.உ.அய்யாபிள்ளை, வணிக ஆய்வாளர் ஆகிய இருவரும், புகார்தாரர் திரு.செந்தில்குமார் என்பவருக்கு புதிய மின் இணைப்பு வழங்க, தலா ரூ.1500/- மற்றும் ரூ.500/- பணத்தை கையூட்டாக பெற்றதற்காக திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் பதியப்பட்ட பொறிவைப்பு வழக்கில், சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருவாரூர் நீதிமன்றத்தில் வழக்கு நடைப்பெற்று, இன்று 10.11.2020 எதிரிகள் திரு.அன்பழகன், இளநிலை பொறியாளர், திரு.உ.அய்யாபிள்ளை, வணிக ஆய்வாளர் ஆகிய இருவருக்கும் தலா 3 ஆண்டு சிறைதண்டனை மற்றும் அபராதம் தலா ரூ.1000/- ஏக காலத்தில் அனுபவிக்க தீர்ப்பு வழங்கப்பட்டது.

## <u>PRESS NOTE</u>

In 2012, Tr.K.Anbalagan, Junior Engineer and Tr.U.Ayyapillai, Commercial Inspector who formerly worked in TANGEDCO, Adambar, Vishnupuram, Thiruvarur District were trapped for demand and acceptance of bribe of Rs.1500/- & Rs.500 respectively from the complainant for providing new service connection and also for shifting the earlier service connection. Today 10.11.2020, the Special Court for Vigilance & Anti-Corruption cases, Thiruvarur pronounced the judgement, convicting against Tr.K.Anbalagan, Junior Engineer and Tr.U.Ayyapillai, Commercial Inspector, to undergo 3 years imprisonment and fine of Rs.1000/-, both the punishment to run concurrently.